வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேனி

தேதி 01.06.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் குற்றவியல் நீதிமுறையில் தடயவியல் அணுகுமுறைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை வேரோடு களைவது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர் உலக நாடுகளிடம் எடுத்துரைத்து வருகின்றனர்.

புதுடெல்லியில் பிரபல விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தொடக்கி வைத்தார்.

பொதுமக்கள் கமிஷன்களுக்கு ஆசைப்பட்டு வங்கி கணக்குகளை கொடுத்து உதவ வேண்டாம் என புதுச்சேரி இணையவழி காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

*அமித் ஷா* (12)

நாட்டின் குற்றவியல் நீதிமுறையில் தடயவியல் அணுகுமுறைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். கொல்கத்தா ராஜர்ஹாட்-ல் 88 கோடி ரூபாய் மதிப்பில் மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தின் புதிய கட்டிடத்தை இன்று திறந்து வைத்து பேசிய அவர், நாடு முழுவதும் தடயவியல் திறன்களை வலுப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார். நியாயமான மற்றும் துல்லியமான தீர்ப்புகளுக்கு அறிவியல் சான்றுகளின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், தடயவியல் உள்கட்டமைப்பை மறுசீரமைப்பது இன்றியமையாதது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த ஆய்வகம் மேற்கு வங்க மாநில மக்களுக்கு மட்டுமன்றி, ஜார்கண்ட், பீகார், ஒடிசா, சிக்கிம், அசாம், வடகிழக்கு பிராந்தியங்கள் மற்றும் அண்டை மாநிலங்களுக்கும் பயனளிக்கும் என்றார்.

*பரம்வீர் சக்ரா* -1 (8)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1947-48ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில் உயிர்த்தியாகம் செய்து நாட்டிலேயே முதல்முறையாக பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பெற்ற, மேஜர் சோம்நாத் ஷர்மா குறித்து ஒரு செய்தி தொகுப்பு….

**(வாய்ஸ்)**

**(வாய்ஸ்)**

1923ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இமாச்சல பிரதேசத்தில் பிறந்தவரான மேஜர் சோம்நாத் ஷர்மா, 1942 பிப்ரவரியில், குமாவோன் படைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர் ஆவார். 1947 அக்டோபரில் ஜம்மு-காஷ்மீர் மீது பாகிஸ்தான், பழங்குடிப் படையெடுப்பில் ஈடுபட்டபோது, பள்ளத்தாக்குப் பகுதியைப் பாதுகாப்பதில் அவர் முக்கியப் பங்காற்றினார். அக்டோபர் 31ஆம் தேதி, 4ஆவது குமாவோன் படைப் பிரிவினர் விமானம் மூலம் ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்ட போது, கையில் காயமடைந்து கட்டுப் போட்டிருந்த நிலையிலும், படைப் பிரிவின் D-கம்பெனி படைக்குழுவிற்கு தாமே தலைமையேற்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். நவம்பர் 3ஆம் தேதி, வேறு 2 படைக்குழுக்கள் அடிப்படை முகாமிற்கு திருப்பி அனுப்பப்பட்டு, பட்காம் அருகே ராணுவ நிலை ஒன்றை பாதுகாக்கும் பொறுப்பு, மேஜர் சோம்நாத் ஷர்மா தலைமையிலான படைக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய தினம் பிற்பகல் 12.35 மணிக்கு எதிரிப் படையினர் சுமார் 700 பேர், சிறு ஆயுதங்கள், குண்டுகள் மற்றும் கனரக தானியங்கி துப்பாக்கிகள் மூலம் மேஜர் சோம்நாத் ஷர்மா தலைமையிலான படைக் குழுவினரை திடீரென தாக்கியதில், இந்தியப் படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. அத்தகைய நிலையிலும், மேஜர் சோம்நாத் ஷர்மா பின்வாங்க மறுத்து, தொடர்ந்து போர்க் களத்தில் நின்று போராட, சக வீரர்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தினார். இந்தியத் தரப்பில் உயிரிழப்புகள் அதிகரித்து ஆயுத பலம் குறைந்து கொண்டே வந்த நிலையிலும், அவர் படைப் பிரிவின் முன்னணியில் நின்று, துப்பாக்கிகளில் குண்டுகளை நிரப்பியும், இலகுரக இயந்திரத் துப்பாக்கியை ஒற்றைக் கை கொண்டே இயக்கியும், சக வீரர்களை தொடர்ந்து வழி நடத்தினார். எதிரிகளுடன் இவ்வாறு அவர் போராடிக் கொண்டிருந்த போது, எதிரிப்படைகள் வீசிய ஒரு குண்டு, அவருக்கு அருகில் இருந்த ஆயுதக் குவியல் ஒன்றின் மீது விழுந்து, வெடித்துச்

சிதறியது. இதனால், 25 வயது கூட ஆகாத இளைஞரான மேஜர் சோம்நாத் ஷர்மாவின் அபாரமான ராணுவ வாழ்க்கை, துயரகரமான முறையில் முடிவுக்கு வந்தது. அதற்கு முன்பாக, படைப்பிரிவின் தலைமையகத்திற்கு மேஜர் ஷர்மா அனுப்பிய கடைசி செய்தியில், "நான் ஒரு அங்குலம் கூட பின்வாங்க மாட்டேன், கடைசி ஆள் இருக்கும் வரை, இறுதிச் சுற்று வரை போராடுவேன்" என்று கூறியிருந்தார். இவ்வாறு மேஜர் ஷர்மாவும் அவரது படைக்குழுவினரும், போரின் முக்கியமான ஒரு தருணத்தில், ஸ்ரீநகர் மற்றும் விமான தளப் பகுதியில் எதிரிப் படைகளின் முன்னேற்றத்தை திறம்பட்ட முறையில் தடுத்து நிறுத்தினார். அபார துணிச்சல் மற்றும் அற்புதமான தலைமைப் பண்பிற்கு எடுத்துக்காட்டாகவே திகழ்ந்த மேஜர் சோம்நாத் ஷர்மாவிற்கு, மரணத்திற்குப் பிந்தைய முறையில், பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

*பிரதிநிதி குழு 1* (18)

தீவிரவாதத்தை வேரோடு களைவது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர் உலக நாடுகளிடம் எடுத்துரைத்து வரும் நிலையில், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு இன்று லண்டன் சென்றடைந்தது. பிரிட்டன் பாராளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்கள், இந்திய வம்சாவளியினர் மற்றும் ஊடகங்களை சந்திக்கும் இக்குழுவினர் இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கின்றனர்.

பிரேசில் நாட்டு தலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்த ஆவலுடன் இருப்பதாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர் தெரிவித்துள்ளார். முன்னதாக, பிரேசில் தலைநகர் பிரசிலியா சென்ற இக்குழுவினர், அந்நாட்டின் மூத்த தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரை சந்தித்தனர்.

ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்த திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் அடுத்த 2 நாட்களுக்கு அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் சமரசமில்லா நிலைபாடுகள் குறித்து எடுத்துரைக்கின்றனர்.

*பிரதிநிதி குழு* 2 (12)

ஜனதா தள உறுப்பினர் திரு சஞ்சய் குமார் ஜா, தலைமையிலான குழுவினர் தங்களது இந்தோனேஷிய பயணத்தை முடித்துக் கொண்டு, மலேஷிய தலைநகர் கோலாலம்பூர் சென்றுள்ளனர். இது தொடர்பாக மலேஷியாவுக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய தூதுக் குழுவினர், மலேஷிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரை சந்திக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சிவசேனா உறுப்பினர் திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே, தலைமையிலான குழுவினர் லைபிரியா நாட்டின் மன்ரோவியா சென்றுள்ளனர். 2 நாட்கள் அங்கு தங்கியிருக்கும் அக்குழுவினர் லைபிரிய அதிபர், அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர், செனட் சபையின் தலைவர் மற்றும் அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சரை சந்திக்க இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மன்சுக் மாண்டவியா* (9)

உடல் ஆரோக்கியத்தை பேணிக் காக்கும் பிட்-இண்டியா இயக்கத்தின் 25 ஆவது சைக்கிள் பேரணியை ஆபரேஷன் சிந்தூரில் பங்கேற்ற துணிச்சலான வீரர்களுக்கு அர்ப்பணிப்பதாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். முன்னதாக, புதுடெல்லியில் பிரபல விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை தொடக்கி வைத்த அமைச்சர்

இதனை தெரிவித்தார். இப்பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தேசிய கொடியுடன் கலந்து கொண்டனர். நாடு முழுவதும் இப்பேரணி 2 ஆயிரம் இடங்களில் நடைபெற்றது.

*பாஸ்கரன் எஸ்பி* (8)

சைபர் மோசடி வழக்குகளில் வங்கி கணக்குகளை மற்றவர்களுக்கு வாங்கி கொடுத்து உதவியதால் இந்த ஆண்டு மட்டும் 10 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் கமிஷன்களுக்கு ஆசைப்பட்டு வங்கி கணக்குகளை கொடுத்து உதவ வேண்டாம் எனவும் இணையவழி குற்றப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் திரு பாஸ்கரன் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார். புதுச்சேரியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இணையவழி குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பேசிய அவர்.........

(வாய்ஸ்)

ஷெகாவத் (7)

பிரேசில் நாட்டில் நடைபெற உள்ள பிரிக்ஸ் சுற்றுலாத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கெஜெந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். பிரேசில் செல்லும் வழியில் லண்டனில் இந்திய வம்சாவளியினரை சந்திக்க இருப்பதாக அவர் கூறியுள்ளார். குறிப்பாக, ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர்களுடன் சுற்றுலா தொழிலை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்க இருப்பதாகவும் திரு ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

வானிலை (12)

6 வடகிழக்கு மாநிலங்களில் பெய்து வரும் பலத்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல், கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகள், வெள்ளப் பெருக்கு போன்றவற்றால் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். இதில் அருணாச்சலபிரதேசத்தில் 9 பேரும், மேகாலயாவில் 6 பேரும், அசாம் மற்றும் மிசோராமில் தலா 5 பேரும், திரிபுரா மற்றும் நாகாலாந்தில் தலா ஒருவரும் உயிரிழந்தனர்.

இதனிடையே, மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று முதல் வரும் ஜூன் 6ஆம் தேதி வரை அடுத்த ஆறு நாட்களுக்கு தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் (5)

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில் அகமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் தகுதி சுற்று ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் அணி-பஞ்சாப் கிங்ஸ் அணியை எதிர்கொள்கிறது. இதில் வெற்றி பெறும் அணி அகமதாபாத்தில் நாளை மறு நாள் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பெங்களுரு அணியை எதிர்கொள்ளும்.

டென்னிஸ் (6)

பாரீசில் நடைபெறும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா - செக் குடியரசின் ஆடம் இணை பின்லாந்தின் ஹெலியோ பாரா- பிரிட்டனின் பாட்டன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி – அமெரிக்காவின் கேலோ வே இணை, அமெரிக்காவின் கிறிஸ்டியன்- ஏவன் இணையை எதிர்கொள்கிறது.